**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

**முல்லைத்தீவு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 25 பெப்ரவரி 2020 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 13 யூலை 2020 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 05 அக்டோபர் 2020 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டுஉத்தியோகத்தரின்கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போதும் இவற்றினை சமர்ப்பிக்கும்போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகளினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கணக்கீட்டுக்கொள்கைகளுக்கு அமைவாக தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றோம் என்பதனைத்தயவுடன் அறியத்தருகின்றேன். |

**(ஆ) பொருண்மையான கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i)கூட்டுமொத்தம் ரூபா 1,075,195 பெறுமதியான 37 வகையான அலுவலக உபகரணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பொறித் தொகுதியும் இயந்திரங்களுமாகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,075,195 ஆல் பொறித் தொகுதியும் இயந்திரங்களினதும் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை அலுவலக உபகரணங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர்செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கூட்டுமொத்தம் ரூபா 1,075,195.00 பெறுமதியான 37 வகையான அலுவலக உபகரணங்களை பொறித்தொகுதியும் இயந்திரங்களில் உள்வாங்கப்பட்டிருந்தமை தொடர்பான சீராக்கங்களை 2020ம் ஆண்டின் இறுதிக்கணக்கறிக்கை தயாரிக்கும் போது சீர் செய்யப்படும் |

| | | |
|---|---|---|
| (ii) கூட்டுமொத்தம் ரூபா 2,178,060 பெறுமதியான 29 கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பொறித் தொகுதியும் இயந்திரங்களுமாகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,178,060 ஆல் பொறித் தொகுதியும் இயந்திரங்களினதும் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை கணினி மற்றும் உதிரிப்பாகங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர்செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கூட்டுமொத்தம் ரூபா. 2,178,060.00 பெறுமதியான 29 கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் தொடர்பான 2020 ஆண்டின் நிதிக்கூற்று தயாரிக்கும் போது கணனி இயந்திரங்கள் எனும் தலைப்பின் கீழ் நிதிக்கூற்றுக்களில் உள்வாங்கப்படும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (iii) கூட்டுமொத்தம் ரூபா 578,892 பெறுமதியான 19 வகையான அலுவலக உபகரணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தளபாடங்களும் பொருத்துக்களுமாகக் காட்டப்பட்டமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 578,892 ஆல் தளபாடங்களும் பொருத்துக்களினதும் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை அலுவலக உபகரணங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர்செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கூட்டுமொத்தம் ரூபா 578,892 பெறுமதியான 19 வகையான அலுவலக உபகரணங்கள் தளபாடபொருத்துகைக்குள் உள்வாங்கப்பட்டமை தொடர்பாக 2020 ஆண்டின் இறுதிக் கணக்கறிக்கை தயாரிக்கும்போது சீர் செய்யப்படும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (iv) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த அலுவலக மற்றும் வெளிக்கள உபகரணங்களின் கூட்டுமொத்தப் பெறுமதிக்கும் மீதிகளின் தொகுப்பு என்பவற்றுக்கிடையில் ரூபா 75,100 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சீர்செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த அலுவலக மற்றும் வெளிக்கள உபகரணங்களின் தொகுப்பின் பெறுமதி ரூபா 75,100 குறைவாகக் காட்டப்பட்டிருந்தமை தொடர்பாக இத்தவறுகள் 2020 ஆண்டின் இறுதிக்கணக்கறிக்கை தயாரிக்கும போது சீர் செய்யப்படும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுமொத்தம் ரூபா 192.6 மில்லியன் பெறுமதியான காணி, கட்டடங்கள், கிணறுகள், அரசிறைக் கடனாளிகள் மற்றும் சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளுக்குரிய காணி உறுதிப்பத்திரங்கள், நில அளவை வரைபடங்கள், பெறுமதி மதிப்பீட்டுச் சான்றிதழ்கள், வரலாற்றுக் கிரயத் தாள்கள், வேலைக் | குறிப்பிடப்பட்டிருக்கும் எழுத்துமூல ஆவணங்களினைப்பெற்று உரியவாறு கோவைப்படுத்துவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | வினைத்திறனான முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். இனிவரும் காலங்களில் கணக்காய்வுக்கு தேவையான அனைத்து ஆவணங்களும் தங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் என்பதையும்தயவுடன் அறியத்தருகின்றேன். |

கோவைகள் மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் என்பன கணக்காய்விற்குக் கிடைத்திருக்காமையினால் அவற்றினை கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்று சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.4 இணங்காமைகள்

#### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | 1988 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி, நிர்வாக விதிகள் | | | |
| (i) | அத்தியாயம் III இன் பிரிவு 33 | சோலை வரி சம்பந்தமான கணிப்பீட்டினை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | சோலை வரி கணிப்பிடப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டதன் பின்னர் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (ii) | அத்தியாயம் V இன் பிரிவு 140 | பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்றிற்கு செலுத்தப் பட்டிருந்த ஆறு முற்பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 274,367 கடந்த 09 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் 09 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் நாளதுவரை இதனை சீர்ப்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. | ஒப்பந்த வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்காத நிலையில் ஒப்பந்த தாரர்களுக்கு முற்பணம் செலுத்தப்படுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். | முற்பணங்கள் யாவும் 2019 ஆம் ஆண்டில் இறுதி நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஆ)** | இலங்கைசனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 155 | கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய பதில்கள் உடனடியாக வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராது 01 தொடக்கம் 03 மாதங்கள் வரையிலான கால தாமதங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த ஒன்பது சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன | கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய விளக்கங்களை தேவைப்படுத்தப்பட்டிருந்தவாறு விரைவாக அனுப்புவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் தங்கள் வினாக்களிற்கான பதிலை உடனடியாக அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | காலம் கடந்த 36 கேள்வி வைப்புக்கள், 40 பிடிபண வைப்புக்கள் மற்றும் 35 நானாவித வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 6,903,703 என்பன தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது 01 தொடக்கம் 07 ஆண்டுகளாக வைப்புக்கள் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன | உரிய காலத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | விரைவில் மீளளிக்க நடவடிக்கை எடுககப்படும். |
| **(இ)** | அரச நிர்வாகச் சுற்றறிக்கை 29 திசெம்பர் 2016 ஆம் திகதியிடப்பட்ட 30/2016 ஆம் இலக்கம் | சபையின் 14 வாகனங்களுக்கு இரு வருடங்களாக எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை நடாத்தப்பட்டிருக்கவில்லை | வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வு பரிசோதனையினை உரிய கால ஒழுங்கில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கட்டம் கட்டமாக எரிபொருள் நுகர்வு பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,893,639 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,570,244 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீத வரிகள் | 202,000 | 2,400 | 2,400 | - | 216,000 | 223,700 | 223,700 | - |
| (ii) வாடகைகள் | 18,104,000 | 18,238,703 | 17,158,514 | 1,080,189 | 17,349,000 | 17,788,141 | 17,337,131 | 615,797 |
| (iii) அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,186,000 | 10,138,634 | 10,138,634 | – | 12,530,000 | 6,805,052 | 6,805,052 | – |
| (iv) ஏனைய வருமானம் | 29,322,000 | 42,787,767 | 17,574,962 | 44,015,767 | | 32,726,896 | 10,591,236 | 38,152,548 |
| மொத்தம் | **51,814,000** | **71,167,504** | **44,874,510** | **45,095,956** | **47,539,000** | **57,543,789** | **34,957,119** | **38,768,345** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டிராமையும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையாலேயுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே வேறுபாடு ஏற்பட்டிருந்தன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | புதுக்குடியிருப்பு பொதுச் சந்தையில் 05 நில வாடகை கடைகளும் விசுவமடு பொதுச் சந்தையில் 03 நில வாடகை கடைகளுமாக கூட்டுமொத்தம் 08 எண்ணிக்கையான நில வாடகைக் கடைகள் 01 சனவரி 2018 தொடக்கம் 2019 திசெம்பர் வரை மூடப்பட்டுள்ளது. இது தொடர்பில் சபையின் 2018 ஏப்ரல் 12 ஆம் திகதிய 56 ஆம் இலக்க தீர்மானம் மற்றும் 2018 மே மாதம் 03 ஆம் திகதிய 76 ஆம் இலக்க தீர்மானம் என்பவற்றுக்கமைய நில வாடகை அடிப்படையில் இனிவரும் காலங்களில் கடைகள் வழங்கப்படுவதில்லை என முடிவு செய்யப்பட்டிருந்தமையால் கூட்டுமொத்தம் ரூபா 228இ000 பெறுமதியான தொகை வருமான | உரிய கால ஒழுங்கில் இத்தகைய ஆதனங்களை கேள்விகோரலுக்கு உட்படுத்துவதனையும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமிடலின் முலம் செயற்படுத்தி அவற்றிலிருந்தவாறான வருமானங்களை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையிலுள்ள 05 நிலவாடகைக் கடைகளும் சபை தீர்மானத்திற்கு அமைவாக புதிய பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளதுடன் விசுவமடு பொதுச்சந்தையின் 03 நிலவாடகைக் கடைகளில் 01 கடையினை முன்னர் ஒப்பந்தம் செய்யப்பட்ட அதே நபரிற்கே மீள கையளிக்கப்பட்டது. மிகுதி 02 கடைகளையும் மீளப் பெற்று புதிய பயனாளிகளுக்கு |

| | | |
|---|---|---|
| இழப்பாக ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) புதுக்குடியிருப்பு, விசுவமடு மற்றும் உடையார்கட்டு சந்தைத் தொகுதிகளில் இயங்கிவரும் 05 உணவுக் கடைகள் 03 வருடங்களுக்கு மேலாக வியாபார உரிமத்தினை பெற தகுதியற்ற நிலையில் சபையினால் தற்காலிக வியாபார உரிமம் வழங்கப்பட்டு வியாபாரத்தினை நடாத்தி வந்தமை அவதானிக்கப்பட்டது. | உரிய கால ஒழுங்கில் இத்தகைய ஆதனங்களை கேள்விகோரலுக்கு உட்படுத்துவதனையும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமிடலின் முலம் செயற்படுத்திச் செல்வதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உரிய கடைகளுக்கான இடவசதிகள் போதுமானதாக இல்லாத காரணத்தினால்தற்காலிக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டு நிலவாடகை அறவிடப்பட்டு வருகின்றது. சபையினால் நிரந்தர கடைகள் அமைக்கப்பட்டதும் வியாபார உரிமம் வழங்கப்படும். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசிறைக்கடனாளிகள் கணக்கில் காட்டப்பட்டிருந்த வாடகைகளும் குத்தகைகளும் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,080,189 இனை அறவிடப்பட்டிருக்க கடந்த 01 தொடக்கம் 03 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அத்தகைய வருமானங்களையும் அவை தொடர்பான நிலுவைகளையும் அறவிட்டுக் கொள்வதற்கு சபையின் செயலாளரினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | ரூபா. 1,080,189.00ல் ரூபா 396,581.00 சேகரிக்கப்பட்டுள்ளது மிகுதியை விரைவில் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் மீளாய்வாண்டில் ஒலுமடு மற்றும் புதுக்குடியிருப்பு உப அலுவலகங்களின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் இயங்குகின்ற 411 வியாபார நிலையங்கள் நிரந்தர வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாது தற்காலிக அனுமதிப்பத்திரத்துடன் தொழிற்படுகின்றன. சபையினால் நிரந்தர வியாபார அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பாக கடந்த இரு ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வியாபார அனுமதிபத்திரம் மற்றும் வியாபார வரி என்பனவற்றினை அறவிட்டுக் கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இவ்வருடம் முதல் நிரந்தர வியாபார உரிமம் வழங்கப்பட்டுவருகின்றது. இனிவரும் காலங்களில் நிரந்தர வியாபார அனுமதிப்பத்திரம் மட்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 40,152,657 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 3,863,110 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | வடக்கு மாகாண பிரதம செயலாளரிடமிருந்து உரிய காலத்தினுள் பெற்றுக் கொள்வதற்கு சபையினால் நடவடிக்கைகள் பயன்மிக்க வகையில் எடுக்கப்படுதல் வேண்டும். | நீதிமன்றத்தண்டப்பணங்கள் ரூபா 40,152,657.00 இல் தற்போது ரூபா. 38,183,739.99 பெறப்பட்டுள்ளது. நிலுவை வருமானங்களை பெறுவதற்கு மாகாண நிறைசேரிக்கான கோரல் கடிதம் எம்மால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) செயற்றிட்டங்களை நிறைவேற்றலில் கால தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபை நிதி மற்றும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக்கொடை நிதி என்பவற்றின் மூலம் முடிவுறுத்தப்பட்டிருக்கவேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 14.16 மில்லியன் பெறுமதியான 06 வீதி புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகள் 06 ஒப்பந்தக்காரர்களினால் கடந்த 07 தொடக்கம் 10 மாதங்களாக பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அத்தகைய செயற்திட்டங்களினை உரிய காலத்தினுள் பூரணப்படுத்தப்படுத்திக் கொள்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட வீதி வேலைகளுக்கான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் ஏற்றபட்ட பிரச்சனை(கிரவல்) அத்துடன் இயற்கை காலநிலை மாற்றத்தினால்(மழை) உரிய வேலைகளை குறித்த காலத்தில் நிறைவேற்ற முடியவில்லை. எனினும் தற்சமயம் குறித்த வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |

#### (ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைவதற்கு தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அக்டோபர் மாதத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக்கொடை நிதியின் மூலம் கூட்டுமொத்தம் ரூபா 2.11 மில்லியன் பெறுமதியில் திண்மக்கழிவு மீள்சுழற்சியிடல் செயன்முறைப்படுத்தலுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் | அச் செயற்திட்டங்களின் மீது பிரயோகிக்கப்பட்டிருக்கும் பணப்பெறுமதிக்குரிய எதிர்பார்க்கபட்ட விளைவினைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைந்து | வேறு திட்டத்தினூடாக குறித்த வேலையை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வேலைகள் முடிவுற்றதும் திண்மக்கழிவுகளை தரம் பிரித்து மீள்சுழற்சிக்குட்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| அடையப்பட்டிருக்காது நாளதுவரை உபயோகமின்றி காணப்பட்டது. | எடுக்கப்படுதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகளை மட்டுமே சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்துவதற்கு சபையினால் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கப்படவில்லை. | கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக 2019 இல் Compost Yard அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அத்துடன் கழிவுகளை தரம்பிரித்து சேகரிப்பதற்கான வர்ணங்களையுடைய கழிவுத்தொட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டு பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு சபையினால் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நிலவும் இடைவெளிகளைப் போன்றே செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கடந்த இரு ஆண்டுகளாக உருவாக்கப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உருவாக்கப்பட்டு அவற்றின் வருடாந்த செயன்முன்னேற்றங்களை அறிந்து கொள்வதற்கான குறிகாட்டிகளையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | செயற்திட்டம் முன்மொழியப்பட்டு உள்;ராட்சி ஆணையாளர், வடமாகாணம் அவர்களுக்கு அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டினதும் நேர்முன்னைய ஆண்டுகளினதும் சபையின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் கூட்டுமொத்தம் ரூபா 83.17 மில்லியன் பெறுமதியில் மதிப்பிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்த 13 மூலதன வேலைத்திட்டங்கள் காணிப் பிரச்சினை, பல்வேறுபட்ட இடர்பாடுகள் காணப்படுதல், சாத்தியமின்மை, மத்திய மற்றும் மாகாண உள்@ராட்சி அமைச்சுக்களின் வேறுபட்ட செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல்கள் போன்ற காரணங்களினால் உரிய காலங்களில் செயற்படுத்தப்படுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது தாமதம் ஏற்படுத்தப்பட்டு சபையின் பாதீட்டு முன்மொழிவுகள் நலிவுறுத்தப்பட்டிருந்தன. | சபையானது குறித்த வருடத்தினுள் சபைநிதியிலிருந்து செயற்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படக் கூடிய வேலைத்திட்டங்களினை மாத்திரமே சபையினது வருடாந்த வரவு செலவு திட்டத்தினுள் உள்ளடக்கபட்டு செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளினை மேற்கொள்ளல் வேண்டும். | இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து உரிய ஆண்டிலேயே வேலைகளை முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குரிய இரு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சந்தை மேற்பார்வையாளர், சுகாதார மேற்பார்வையாளர், மற்றும் ஐந்து வேலைத் தொழிலாளிகள் பதவிகளுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காமையினால் அத்தகையவர்களினால் முன்னெடுக்கப்பட்டிருக்கக் கூடிய சபையினது வேலைகளில் தாமதங்கள் மற்றும் நலிவுகள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக சபையினால் வாகன சாரதியொருவர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு அவருக்கு கடந்த இரு ஆண்டுகளாக சபை நிதியிலிருந்து சம்பளம் செலுத்தப்பட்டுமிருந்தது. | பதவியணியினரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தவாறு பரவலாக்கல் மூலம் பெற்றுக் கொள்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | சுகாதார தொழிலாளி, வேலைத் தொழிலாளி, காவலாளி மற்றும் சாரதி போன்ற பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆயினும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அனுமதி இதுவரை கிடைக்காத காரணத்தினால் நிரந்தர நியமனம் வழங்கமுடியாத நிலையிலுள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ள தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த நீர்ப்பம்பி, கையுழவியந்திரம் என்பனவற்றை கடந்த 10 வருடங்களாக திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கேற்ற வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்தத்திற்குள்ளாக்கப்பட வேண்டியுள்ள வாகனங்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | திருத்தம் செய்ய முடியாத நிலையிலிருந்த நீர்ப்பம்பியானது வருடாந்த கணக்கெடுப்பு சபையினால் பொது–47 படிவத்தில் உள்வாங்கப்பட்டுள்ளமையால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட வாகனங்களில் கையுழவு இயந்திரம் சபைக்கு வழங்கப்பட்மைக்கான ஆவணங்கள் எவையும் சபையில் இல்லை. அத்துடன் வாகனத்தின் உரிமையினை அடையாளப்படுத்தக்கூடிய ஆவணங்கள் பதிவுப்புத்தகங்கள் இல்லாமையினால் குறித்த வாகனத்தினை திருத்தம் செய்து பயன்படுத்தவோ விற்பனை செய்யவோ முடியவில்லை. அத்துடன் இதனை திருத்தி பயன்படுத்துவதற்கு பொருத்தமான இணைப்பு பெட்டி இல்லை. அத்துடன் சபையில் 06 உழவு இயந்திங்கள் பயன்பாட்டிலுள்ளமையினால் கையுழவு இயந்திரம் சபையின் பயன்பாட்டிற்கு பயனுறுதிமிக்கதொன்றாக அமையும் என எதிர்பார்க்க முடியவில்லை. |

**3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டு சபையின் பயன்பாட்டிலுள்ள 21 வாகனங்களுக்குரிய வாகனப் பதிவுப் புத்தகம் பெறப்பட்டிருக்க கடந்த 01 தொடக்கம் 10 வருடங்களாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களுக்குரிய பதிவுப் புத்தகத்தினை பெற்றுக் கொள்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | வாகனப் பதிவு புத்தகம் இல்லாத ஏனைய வாகனங்கள் உரிமையாளர் விபரம் பெறப்பட்டு கட்டம் கட்டமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.4.3 வருடாந்த பொருள்/இருப்பு மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கையின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி 757 இற்கமைவாக பின் தொடர் நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொடர் நடவடிக்கைகள் உரிய காலத்தினுள் நிறைவேற்றப்படுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இந்நடவடிக்கை முடிவுற்றதும் அறிக்கையினை தங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் சபைக்குரிய பெறுகைத்திட்டம், மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடத்திற்குரிய பெறுகைத்திட்டம், மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | மீளாய்வு ஆண்டிற்கு முன்பு பெறுகைத்திட்டம் மற்றும் பெறுகை கால அட்டவணை என்பன தயாரிக்கப்படவில்லை என்பதுடன் 2020ஆம் ஆண்டிலிருந்து பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. |

### 3.5.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டியின் பந்தி 2.14.1 இன் பெறுகை குறைநிரப்பியின் பிரகாரம் சபையின் பெறுகைக்குழுவின் அனுமதி பெறப்பட்டிருக்காது கூட்டுமொத்தம் ரூபா 1,620,740 பெறுமதிக்கு காகிதாதி, மின்னியல் உபகரணங்கள், வாகனத் திருத்தம், ரோணர்கள் மற்றும் நாளாந்த பாவனைப் பொருட்கள் என்பன பல்வேறு வழங்குனர்களிடம் இருந்து நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 12 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | சபையின் பெறுகைக்குழுவின் அனுமதி பெறப்பட்டு பொருட்கள் சேவைகள் பெற்றுக்கொள்ளப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இத்தவறுகள் இடம் பெறாமல் நடவடிக்கை எடுக்கின்றோம். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் மீளாய்வாண்டிற்கான வரவுசெலவு பாதகமான வேறுபாடுகளும், மூன்று வகையான மதிப்பிடப்பட்ட வருமானம் உண்மை வருமானம், என்பவற்றிற்கிடையே 60 சதவீதம் தொடக்கம் 142 சதவீதம் வரையிலான சாதகமானதுமான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன. | சபையானது பொருத்தமான அடிப்படைகளைக் கருத்திலெடுத்து நடைமுறைக்கு சாத்தியமான வருடாந்த வரவு செலவு திட்டத்தினை தயாரித்து வினையாற்றலுடன் செயற்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் தங்களின் கருத்துக்களை கவனத்தில் கொண்டு பாதீடு தயாரிக்க நடவடிக்கை எடுக்கின்றோம் என்பதனை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன |